**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, FAST TRACK MAHILA COURT, THANJAVUR.

**SC. No - 186/2019**

**PW - 3**

| | | | |
|---|---|---|---|
| Name | ரேவதி | Occupation | |
| Husband/Father's Name | | Village | |
| Age | | Taluk | |
| Date | 22.07.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
**(A1 to A4 present.)**

முதல் விசாரணை **:-**

நான் வலங்கைமானில் குடியிருந்து வருகிறேன். எனக்கு முன்பு சாட்சி சொன்னவர் என்னுடைய அம்மா. இந்த வழக்கில் இறந்து போன நபர் என்னுடைய தங்கை. ஆஜர் எதிரிகளை தெரியும். என்னுடைய தங்கை கலாவை ஆஜர் ஒண்ணாவது எதிரி ஸ்டாலினுக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டது. ஸ்டாலினின் பெற்றோர்தான் ஆஜராகியுள்ள ரெண்டு, மூணு எதிரிகள். ஸ்டாலின் அக்கா மூலமாகத்தான் எங்களுக்கு இந்த சம்பந்தம் கிடைத்து. எங்கள் தங்கச்சியை அவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். திருமணத்தின்போது 10 பவுன் நகை ஸ்கூட்டி சீதனமாக பொருட்கள் கொடுக்கப்பட்டது. என் தங்கையின் கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்தார். அவர் மூன்று மாதத்திற்கு ஒரு முறை தான் வருவார். வருகின்ற நாட்களில் எல்லாம் அடிக்கடி சண்டை பிரச்சனை நடந்து வந்தது. பிரச்சனை இருப்பதால் என்னுடைய தங்கை கணவர் வெளிநாடு சென்றவுடன் எங்கள் வீட்டிற்கு என் அப்பா அம்மாவுடன் வந்து இருந்து விடுவார். என் தங்கைக்கு அவருடைய மாமனார் மாமியாரின் துன்புறுத்தல் அதிகமாக இருந்தது. துன்புறுத்தல் காரணமாக அதிகமாக எங்களுடைய

வீட்டில் தான் தங்கை இருந்து வந்தார், மாமனார் மாமியாருடன் இருந்ததில்லை. ஒருமுறை சண்டை நடந்த போது நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கலாம் என சொன்னோம். அப்போது என் தங்கையின் கணவர் வீட்டில் இருந்து அவர்களுடைய உறவினர் வந்து வேண்டாம் என சொல்லி சமாதானப்படுத்தி என் தங்கையை மீண்டும் அழைத்துச் சென்றார்.

2. அதன் பிறகு தங்கையின் கணவர் மூன்று மாதம் கழித்து வெளிநாட்டில் இருந்து வந்த உடன் ஒரு 15 நாட்கள் பிரச்சனை நடந்தது. அதன் பிறகு நாங்கள் எங்கள் ஊருக்கு தங்கையை அழைத்து வந்துவிட்டு மீண்டும் கணவர் வீட்டில் கொண்டு போய் விட்டு வந்தோம். 01.06.2017–இல் எங்களுடைய தம்பியின் திருமணத்திற்காக எங்கள் ஊருக்கு கலா வந்திருந்தார். அப்போது என்னிடம் மாமனார் மாமியார் தொல்லை துன்புறுத்தல் அதிகமாக இருப்பதாகச் சொன்னார். மீண்டும் என் தங்கை அவளுடைய ஊருக்குப் போகும்போது என் பெற்றோர் ரூபாய் 14,000 கொடுத்து அனுப்பினார்கள். மாடியில் நிலை கதவு வைப்பதற்காக என் தங்கையை அழைத்து இருந்தார்கள். என் தம்பியின் திருமணம் முடித்து அவருடைய ஊருக்கு கலா போயிருந்தார். 03.06.2017 அன்று என் தங்கையின் ஊரிலிருந்து ரமேஷ் என்பவர் எனக்கு போன் மூலமாக கூப்பிட்டார். என் தங்கை தூக்கு மாட்டி இறந்து விட்டதாக சொன்னார். உடனே என் அப்பாவுக்கு முதலில் தகவல் கொடுத்தேன்.

3. நான் அதை நம்பாமல் என் தங்கைக்கு ஐந்து முறை அவருடைய கைபேசிக்கு அழைத்தபோது கைபேசி ரிங் போனபோதும் யாரும் எடுக்கவில்லை. அடுத்த முறை கூப்பிட்ட போது மொபைலை சுவிட்ச் ஆப் செய்து விட்டார்கள். நான் என்னுடைய வீட்டிலிருந்து மீண்டும் தங்கையின் ஊருக்கு மதியம் மூன்று மணிக்கு சென்றேன்.

அங்கு என் அம்மா மற்றும் எங்களுடைய சில உறவினர்கள் மட்டும்தான் அந்த வீட்டில் இருந்தார்கள். என் தங்கையின் கணவர் வீட்டைச் சேர்ந்தவர்கள் யாருமே அந்த வீட்டில் இல்லை. அதன் பிறகு தான் அப்பா அதிராமபட்டினம் காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்தார். அதன் பிறகு என் தங்கையின் உடலை மருத்துவமனைக்கு கொண்டு சென்று மறுநாள் வருவாய் கோட்டாட்சியர் மூலமாக பிரேத பரிசோதனை முடித்து எங்கள் ஊருக்கு தங்கையின் உடலை எடுத்துச் சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்**

4. என் தங்கையை திருமணம் செய்வதற்கு முன்பே ஒண்ணாவது எதிரி ஸ்டாலின் வெளிநாட்டில் தான் தொடர்ந்து வேலை செய்து வந்தார் என்றால் ஆமாம். அவர் வெளிநாட்டில் வேலை செய்து தன்னுடைய வீட்டில் மாடி வீட்டு கட்டி கிரகப்பிரவேசம் செய்துதான் என் தங்கையை திருமணம் செய்தார் என்றால் ஆமாம். என் தங்கையின் திருமணம் கணவர் வீட்டில் தான் அவருடைய செலவுகளுடன் நடந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு கணவர் வீட்டில் தான் செலவுகள் செய்தார்கள் என்றால் ஆமாம். திருமணம் முடிந்து அந்த வீட்டில் தான் என் தங்கையும் ஒன்னாவது எதிரியும் வாழ்ந்து வந்தார்கள் என்றால் ஆமாம். அந்த சமயத்தில்தான் என் முதல் முறையாக கருவுற்றார் என்றால் ஆமாம். அதன் பிறகு அவருக்கு லீவு முடிந்து ஸ்டாலின் வெளிநாடு திரும்பிவிட்டார் என்றால் ஆமாம். வெளிநாடு சென்ற பிறகு நாங்கள் எங்களுடைய வீட்டிற்கு தங்கையை அழைத்துச் சென்றோம் என்றால் இல்லை, அவர்களுடைய துன்புறுத்தல் காரணமாகத்தான் எங்கள் வீட்டிற்கு தங்கை வந்துவிட்டார். நான் சொல்வது போல் தொந்தரவு செய்ததால் வரவில்லை என்றும்

கணவர் வெளிநாடு சென்ற பிறகு என் பெற்றோர்தான் என் தங்கையை அவர்களுடைய வீட்டுக்கு அழைத்து வந்து விட்டார்கள் என்றால் சரியல்ல.

5. வெளிநாட்டிலிருந்து ஸ்டாலின் வந்த பிறகுதான் என் தங்கை தன் கணவர் வீட்டுக்கு போவார் என்றால் அவர் வெளிநாட்டிலிருந்து வந்து தான் என் தங்கையை அவருடைய வீட்டுக்கு அழைத்துப் போவார். வெளிநாட்டிலிருந்து ஸ்டாலின் வந்தவுடன் என் தங்கை எங்கள் பெற்றோர் வீட்டிலிருந்து தன் கணவர் வீட்டுக்கு அவர் போய்விடுவார் என்றால் அப்படி இல்லை. ஸ்டாலின் வெளிநாடு போனவுடன் என் தங்கை எங்கள் பெற்றோர் வீட்டுக்கு வந்து விடுவார், அதன் பிறகு கணவர் மீண்டும் வந்தவுடன் தான் என் தங்கை தன் கணவர் வீட்டுக்கு போய் வந்தார் என்றால் அவ்வாறு நடக்கவில்லை.

6. நான் வலங்கைமானில் என் கணவருடன் குடியிருந்து வருகிறேன் என்றால் ஆமாம். ஸ்டாலின் தன்னுடைய வருமானம் முழுவதும் என் தங்கைக்கு தான் அனுப்புவார் என்றால் பொய். அந்த வருமானத்தை வைத்துதான் என்னுடைய பெற்றோர் குடும்பம் நடத்தி வந்தார்கள் என்றால் இல்லை. அந்த வருமானத்தை பெற வேண்டும் என்பதற்காகத்தான் என் தங்கையின் கணவர் வெளிநாடு சென்றவுடன் என் தங்கையை அவர்கள் வீட்டுக்கு என் பெற்றோர் அழைத்து வந்து விடுவார்கள் என்றால் இல்லை. என் தங்கையின் மாமனார், மாமியார் உடல் நலக்குறைவால் மிகவும் வயதானவர்கள் என்றால் பத்து வருடத்திற்கு முன்பு நல்ல நிலையில் தான் இருந்தார்கள். என் தங்கையின் மாமனாருக்கு தற்போது 95 வயது என்றால் அவருக்கு 10 வருடத்திற்கு முன்பு வயது அதிகமாக இருந்தாலும் நல்ல உடல் நிலையில்தான் இருந்தார். என் தங்கையின் மாமியாருக்கு 91 வயது என்றால் பத்து வருடத்திற்கு முன்பு

நல்ல ஆக்டிவாக தான் அவர்கள் இருந்தார்கள். பத்து வருடத்திற்கு முன்பிருந்தே அவர்கள் இருவரும் நல்ல உடல் நிலையில் இல்லை நிதானமாக இல்லை குறிப்பாக என் தங்கையின் மாமனார் நிதானம் இல்லாமல் தான் இருந்து வருகிறார் என்றால் இல்லை. இருவரும் மிகவும் வயதானவர்கள் அவர்களுடைய மகளை போல தான் வைத்திருந்தார்கள் என்றால் சுத்தமான பொய்.

7. திருமணத்திற்கு பிறகு என்னுடைய தங்கைக்கு மாடி வீட்டில் தனியாக ஒரு ரூம் கொடுத்து இருந்தார்கள் என்றால் இல்லை, அவர்கள் எல்லோரும் ஒன்றாக தான் இருந்து வந்தார்கள், என் தங்கைக்கு தனியாக ஒரு ரூம் கொடுக்கப்பட்டிருந்தது. திருமணத்திற்கு பிறகு தனியாக ரூம் கொடுக்கப்பட்டு சந்தோஷமாகத்தான் என்னுடைய தங்கை அவருடைய கணவர் வீட்டில் இருந்து வந்தார் என்றால் சந்தோஷமாக இருக்கவில்லை. அவ்வாறு சந்தோஷமாக இருக்கவில்லை என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒன்றாவது எதிரி தன்னுடைய மனைவி சொகுசாக போக வேண்டும் என்பதற்காகத்தான் ஸ்கூட்டி வாங்கி கொடுத்திருந்தார் என்றால் நாங்கள் தான் திருமணத்தின் போது வாங்கிக் கொடுத்தோம், ஸ்டாலின் வாங்கிக் கொடுக்கவில்லை. நான் சொல்வது தவறு என்றும் ஸ்டாலின் பெயரில்தான் வண்டி உள்ளது அதற்காகத்தான் அவர் பணம் கொடுத்து வாங்கிக் கொடுத்தார் என்றால் வண்டி அவர் பெயரில் இருந்தாலும் அதற்கான தொகையை நாங்கள் தான் கொடுத்தோம். நான் சொல்வது போல் திருமணத்தின்போது இந்த வண்டி வாங்கப்படவில்லை நாங்கள் எந்த தொகையும் கொடுக்கவில்லை திருமணம் முடிந்து ஓராண்டு கழித்து இந்த வண்டியை ஸ்டாலின் தன் மனைவிக்காக அவர் பெயரில் வாங்கிக் கொடுத்தார் என்றால் சரியல்ல.

8. ஸ்டாலின் தன்னுடைய மனைவி நல்ல சுகமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் தன்னுடைய மாடி வீட்டில் கூடுதலாக இரண்டு அறைகளை புதிதாக கட்டினார் என்றால் என் தங்கைக்காக கட்டவில்லை. என் தங்கைக்காக தான் கட்டினார் என்றும் அந்த கட்டிடத்திற்கு நிலவு கால் வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் என் தங்கையை எங்களுடைய பெற்றோர் வீட்டில் இருந்து ஸ்டாலின் அழைத்தார் என்றால் இல்லை. நிலவு வைப்பதற்காக ஸ்டாலின் வெளிநாட்டிலிருந்து என் தங்கையை அவருடைய வீட்டுக்கு போக சொன்னாரா என்றால் அதற்காக போக சொன்னார். என் தங்கை இரண்டாவது முறையாக கருவுற்று இருந்தார் என்றால் இல்லை. அவ்வாறு இரண்டாவது முறை கருவுற்றிருந்த போதுதான் என்னுடைய பெற்றோர் கட்டாயப்படுத்தி என் தங்கையை பலவந்தமாக கருவை கலைக்க செய்தார்கள் என்றால் இல்லை. இதுபோல் யாருக்கும் தெரியாமல் கருவை கலைத்து விட்டார்களே என்று என் தங்கை மன உளைச்சலுடன் இருந்து வந்தார் என்றால் அது போல் நடக்கவில்லை. என் தங்கை இரண்டாவது முறை கருவுற்று இருந்தார் என்றும் அதனை ஒப்புக்கொண்டால் எங்களுக்கு பாதகமாகிவிடும் என்பதால் தற்போது அதனை மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

9. என் தங்கையின் இறப்புக்கு காரணமே என்னுடைய பெற்றோர் எங்கள் குடும்பத்தார் இரண்டாவது முறை அவருடைய கருவை கலைக்க கட்டாயப்படுத்தியதுதான் என்றால் சரியல்ல. அந்த கருவை கலைப்பதற்கு முன்பு வரை என் தங்கை நல்ல நிலையில் சந்தோஷமாக அவருடைய கணவருடன் கணவர் குடும்பத்தாருடன் வாழ்ந்து வந்தார் என்றால் சுத்தமான பொய். கருவை கலைத்த பிறகுதான் அவருக்கு மன நிலை

பாதிக்கப்பட்டது என்றால் நல்ல மனநிலையில்தான் என் தங்கை இருந்தார் அதுபோல் நடக்கவில்லை.

10. நிலவு வைப்பதற்காக கொத்தனார், வேலை ஆட்கள் அங்கு வேலை செய்து வந்தார்கள் என்றும் அவர்கள் வேலைக்காக மேலே சென்றபோதுதான் ரூமில் என் தங்கை தொங்குவதை பார்த்து தகவல் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அதன் பிறகு தான் அங்கு அருகில் இருப்பவர்கள் வந்து பார்த்து அவருடைய மாமனார் தான் எப்படியாவது அவரை இறக்க வேண்டும் என்று முடிவு செய்து ஜன்னலை உடைத்து தான் கொத்தனார், சித்தாள் தான் என் தங்கையை கீழே இறக்கினார்கள் என்றால் அதுபோல் ஜன்னல் எல்லாம் எதுவும் உடைக்கப்படவில்லை. அதன் பிறகு உள்ளே சென்ற கொத்தனார் முன் கதவை திறந்துதான் மற்றவர்கள் உள்ளே சென்று பார்த்தார்கள் என்றால் கதவு ஜன்னல் உடைக்கப்படவில்லை திறந்தே தான் இருந்தது. வழக்குக்காக வேண்டி ஜன்னல் உடைக்கப்படவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11. என் தங்கையின் ஊரில் உள்ள பிரசிடெண்ட் இடம் தகவல் கொடுத்து அவர் தான் எங்களுக்கு தகவல் கொடுத்தார் என்றால் எனக்கு ரமேஷ் என்பவர்தான் போன் மூலமாக தகவல் கொடுத்தார். ரமேஷ் ஊராட்சி மன்ற தலைவர் என்றால் ஆமாம். என் தங்கையின் ஊருக்கு எங்கள் பெற்றோர் ஊரில் இருந்து வேன் எடுத்துக்கொண்டு எல்லோரும் அங்கு வந்தார்கள் என்றால் அது போல் யாரும் வேன் எடுத்து கொண்டு அங்கு வரவில்லை. இதுபோல் வேன் எடுத்துக்கொண்டு வந்து ஸ்டாலின் வீட்டை அடித்து உடைத்து அங்கு இருந்த ஆட்களையும் அடித்து சாமான்களை உடைத்தார்கள் என்றால் அதுபோல் எதுவும் நடக்கவில்லை. அதன் பிறகு அங்கிருந்து தங்கையின்

உடலை எடுத்துக்கொண்டு அதிராம பட்டினம் போலீஸிடம் தகவல் சொல்லி அதிராம பட்டினம் சென்று விட்டோம் என்றால் அது போல் நடக்கவில்லை.

12. என் தங்கை இறந்த சமயத்தில் ஸ்டாலின் வெளிநாட்டில் தான் வேலையில் இருந்தார் என்றால் ஆமாம். அதிராமபட்டினம் நாங்கள் சென்ற பிறகு என் தங்கையின் கணவர் வீட்டில் இருந்தும் அவருடைய ஊரில் இருந்தும் யாரும் வரவிடாமல் தடுத்து நாங்களே தங்கையின் உடலை எடுத்துக்கொண்டு எங்கள் பெற்றோர் ஊருக்குச் சென்று விட்டோம் என்றால் அதுபோல் இல்லை அங்கு யாருமே வரவில்லை. அந்த இடத்தில் யாரும் வரவில்லை என சொல்வது தவறு என்றும் நாங்கள் பிரச்சனை செய்து யாரையும் வரவிடாமல் தடுத்து விட்டோம் என்றால் அதுபோல் செய்யவில்லை.

13. போலீசார் விசாரணை செய்தபோது என் தங்கையின் மாமியார், மாமனார் துன்புறுத்தினார்கள் என்பதை நான் சொல்லவில்லை என்றால் சொன்னேன். அதுபோல் போலீசார் விசாரித்தபோது சண்டை ஒருமுறை நடந்த போது போலீசாரிடம் சொல்ல போகலாம் என முடிவு செய்த போது என் தங்கையின் கணவர் உறவினர் ஒருவர் வந்து சமாதானம் செய்தார் என சொல்லவில்லை என்றால் சொல்லி உள்ளேன். 01.06.2017 என் தம்பிக்கு திருமணம் நடந்ததாகவும் அந்த சமயத்தில் என் தங்கை ஊருக்கு வந்திருந்ததாகவும் போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். அந்த சமயத்தில் என் தங்கை தன்னுடைய மாமனார் மாமியார் துன்புறுத்தியதாக என்னிடம் சொன்னதாக சொல்வதும் போலீசாரிடம் சொல்லி உள்ளேன் என்றால் சொன்னேன்.

14. போலீசார் முதலில் விசாரணை செய்து ஆஜர் எதிரிகள் மீது எவ்வித தவறும் இல்லை என முடிவு செய்து வழக்கு போடவில்லை என்றால் அவ்வாறு இல்லை.

போலீசார் வழக்கு போடாத காரணத்தினால் நாங்கள் ஹைகோர்ட்டுக்கு போனோம் என்றால் ஆமாம். ஹைகோர்ட்டில் ஸ்டாலின் அங்கு வந்து சமாதானம் பேசி அவருடைய மாடி வீட்டை எழுதி வாங்கினோம் என்றால் அவ்வாறு எந்த சமாதானமும் அங்கு பேசவில்லை. மாடி வீடு எழுதி வாங்கப்பட்டதா என்றால் அவர் விருப்பத்துடன் எழுதிக் கொடுத்தது. ஹைகோர்ட்டுக்கு போய் அதன் பிறகு தான் பேசி ஸ்டாலின் இடம் எழுதி வாங்கினோம் என்றால் வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளலாம் சமாதானம் ஆகலாம் என கேட்டார் ஆனால் நாங்கள் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. இடத்தை எழுதி வாங்குவதற்காக தான் நாங்கள் பேசி முடிவு செய்து இடத்தை தற்போது எழுதி வாங்கிவிட்டு அதற்கு மாறாக இங்கு வந்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் எவ்வித தொந்தரவும் துன்புறுத்தலும் நான் சொல்வது போல் என் தங்கைக்கு செய்யவில்லை என்றால் சரியல்ல. உண்மை விவரமான என் தங்கை இரண்டாவது முறை கருவுற்று அதை கலைக்க கட்டாயப்படுத்தியதால் தான் மன உளைச்சலால் அவர் இறந்தார் என்றும் அதனை மறைப்பதற்காக நாங்கள் எங்கள் மீது பாதிப்பு வராமல் இருப்பதற்காக பின்னிட்டு ஹைகோர்ட் சென்றோம் என்றால் சரியல்ல. நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஓம்/– அ. தீபா,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,(FTC)
தஞ்சாவூர்.